SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**முதல்பருவத்தேர்வு - 2019**

தேதி : 27.9.19 மதிப்பெண்கள்: 80

வகுப்பு : 8 (3L) கால அளவு : 3 மணிநேரம்

**பகுதி - அ ( வாசித்தல் )**

**I. பின்வரும் பத்தியைப் படித்து விடையளி:** **(5)**

தற்கால அறிவியல் விந்தைகளுள் ஒன்று ரோபோ. ரோபோவை இயந்திர மனிதன் என நாம் அழைக்கிறோம். ஜப்பானின் தலைநகரான டோக்கியோவில் நடைபெற்றஅறிவியல் கண்காட்சிக்கு இலக்கியா சென்றிருந்தாள். அங்கு துணி துவைத்தல், வீட்டைத் தூய்மைசெய்தல் போன்ற வேலைகளைச் செய்து கொண்டிருந்த ரோபோவைப் பார்த்தாள்.

**வினாக்கள்:**

1. ரோபோவை ___________ என நாம் அழைக்கிறோம்.
2. ஜப்பானின் தலைநகரம் ___________________.
3. அறிவியல் கண்காட்சிக்குச் சென்றவள் _________________.
4. தற்கால அறிவியல் விந்தைகளுள் ஒன்று _____________
5. ரோபோ செய்த வேலைகளுள் ஒன்று _____________.

**II. பத்தியைப் படித்து விடையளி:** **(5)**

எறும்புகள் சுறுசுறுப்பு மிக்கவை. அவை வெப்பமான நாடுகளில் தான் அதிகமாக வாழும் .உலகில் 1200 வகையான எறும்புகள் உள்ளன. அவை தனித்து வாழ ஆசைப்படுவதில்லை. கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து வாழும். அவை சாரை சாரையாகச் செல்லும். எறும்புகள் மோப்பத்தால் பொருட்களை அறிந்து கொள்ளும் சக்தி உடையவை. பூமிக்கு அடியில் குழி தோண்டி வாழும். அதற்கு புற்று என்று பெயர்.

**வினாக்கள்:**

**6.** உலகில் எத்தனை வகையான எறும்புகள் வாழும்?

**7.** எறும்புகள் எதனால் பொருட்களை அறிந்து கொள்ளும்?

**8.** எறும்புகள் வாழும் இடத்திற்கு ____________ என்று பெயர்

**9.** எறும்புகள் ________ மிக்கவை.

10. எறும்புகள் _________ நாடுகளில் தான் அதிகமாக வாழும்.

## பகுதி - ஆ ( எழுதுதல் )

**III. சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக:** (4)

**11.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தை | கே | ங் | எ | நா | பூ |
| கே | எ | ன் | நா | தா | பூ |
| அ | ங் | கே | தீ | ய் | னை |
| எ | கே | தை | ங் | எ | த |
| அ | தை | அ | து | ன் | தை |
| ஆ | மா | பா | அ | ன | கை |

1. அங்கே
2. அது
3. எங்கே
4. என்ன
5. பூ
6. பூனை
7. தீ
8. நாய்

**IV. “ மகர “ வரிசையில் எழுதுக:** (6)

12.

மாலை, மீன் , மெத்தை, மழை, மின்னல் , மொட்டு , மூக்கு, மேடு, மை, முழங்கால், மோதிரம், மௌனம்

**V. படங்களின் துணையுடன் வாக்கியம் அமைக்க:** **(5)**

13.  வளர்ப்போம்  பெறுவோம்.

14.  காலையில் மலரும்.

15. எனக்கு பிடித்த பழம் 

16.  வீட்டைக் காவல் காக்கும்.

17. 

சாலையில் சென்றது.

**VI. முறைப்படுத்தி எழுதுக:** **(5)**

18. குளத்தில் பூத்தன மலர்கள் அல்லி

19. பந்து விளையாடினேன் இன்று நான்

20.பால் பசுவின் நல்லது உடலுக்கு.

21. மரம் வீச காற்று வீசும்

22. பாடம் தவறாமல் படிப்பேன் தினமும் நான்

**VII. குறிலை நெடிலாக்குக**: (3)

23. குடை 24. எடு 25. மலை

**VIII. ஒருமையை பன்மையாக மாற்றுக: (3)**

26. கோடு 27. பல் 28. பூ

**பகுதி - இ (இலக்கணம்)** (15)

**IX. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

---

29. அ்ஃறிணை - பிரித்து எழுதுக. __________

30. திணை என்பதன் பொருள் ________

31. பால் ___________ வகைப்படும்.

32. கீதா என்பது _______________ பால்.

33.காலம் _________ வகைப்படும்.

34. நான் படித்தேன் என்பதன் எதிர்காலம் __________

. 35. பெயர்ச்சொல்லிற்கு ஒரு எடுத்துக்காட்டு _________

36. உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் _____________

37. நான்காம் வேற்றுமையின் உருபு _________

38. வேற்றுமை __________ வகைப்படும்.

39. கலா பாடினாள் - வினைச்சொல் எது ? _________

40. சொல் _______ வகைப்படும்.

41. தனக்கு முன்னால் இருப்பவர்களைக் குறிப்பது ________ இடம் ஆகும்.

42. மென்மையாக ஒலிப்பவை _________ எழுத்துகள்.

43. நெடில் எழுத்துகளுக்குரிய மாத்திரையின் கால அளவு __________

**X. காலப் பிழைகளை நீக்கி எழுதுக:** **(5)**

44. செல்வன் நேற்று பாடம் படிக்கிறான்.

45. நாளை மழை பெய்தது .

46. நேற்று தேர்வுகள் நடக்கும்.

47. கலா நாளை பாடம் படித்தாள்

48. திருவள்ளுவர் நேற்று திருக்குறள் எழுதுவார்.

## பகுதி - ஈ ( இலக்கியம் )

**XI. பின்வரும் பத்தியைப் படித்து விடையளி:** **(5)**

அன்று பள்ளியின் முதல் நாள். மாணவர்கள் ஆவலோடு பள்ளிக்கு வந்தனர். மணி ஒலித்தது. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து முதலில் தன்னை அறிமுகம் செய்து

கொண்டார். அதன் பிறகு மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். அந்த வகுப்பில் மாலா, நவீன் ஆகிய இருவரும் புதிதாகச் சேர்ந்தவர்கள். என் பெயர் மாலா,எனது ஊர் திருச்சி,எனக்கு பூனை வளர்ப்பது பிடிக்கும் என்றாள் மாலா. என் பெயர் நவீன், எனது ஊர் தஞ்சாவூர், என் அப்பாவின் பெயர் சுந்தரம், என் அம்மாவின் பெயர் குமுதா என்றான் நவீன்.

**வினாக்கள்:**

49. பள்ளிக்கு ஆவலோடு வந்தவர்கள் யாவர்?

50. மாலாவின் ஊர் எது?

51. நவீனுடைய அம்மாவின் பெயர் என்ன?

52. பூனை வளர்ப்பது பிடிக்கும் என்றது யார்?

53. அன்று பள்ளியின் ________ நாள்.

**XII. பத்தியைப் படித்து விடையளி:** (5)

உலகில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. அவற்றுள் செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழிகள் ஏழு. அவை கிரேக்கம், இலத்தீன், சீனம்,ஈப்ரு,அரேபியம்,சமற்கிருதம்,தமிழ் ஆகியனவாகும். நம் தாய்மொழியான தமிழ் காலத்தால் முந்தையது. தமிழே உலகின் முதல் மொழி, மூத்தமொழி என்று தேவநேயப் பாவாணர் குறிப்பிடுகிறார்.தமிழ் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழைக் கொண்டது, வா, தை, பை போன்ற 42 ஓரெழுத்துச் சொற்களைக் கொண்டது.

வினாக்கள்:

54. தமிழ் இயல், இசை, ______________ என்னும் முத்தமிழைக் கொண்டது.

55. தமிழில் உள்ள ஓரெழுத்துச்சொற்கள் மொத்தம் ______________ .

56. செம்மொழியாக அறிவிக்கப்பட்ட மொழிகள் மொத்தம் ______________

57. காலத்தால் முந்தைய மொழி எது ? ______________ .

58. உலகில் ______________ மேற்பட்ட மொழிகள் உள்ளன.

XIII. விடுபட்ட திருக்குறள் சீர்களை எழுதுக. (4)

59. இனிய ________ இன்னாத கூறல் கனியிருப்பக்

கனியிருப்பக் காய்க்கவர்ந் _______

60. கற்க _________ கற்பவை __________

நிற்க அதற்குத் தக.

XIV. பின்வரும் வினாக்களுக்குள் **ஐந்திற்கு** மட்டும் விடையளி: (10)

61. ஐம்பூதங்கள் எவை?

62. வெட்டுக்கிளி யாரைப் பார்த்தது?

63. கவிமணி எழுதிய நூல்கள் யாவை?

64. மக்களுக்கு துன்பம் தருவது யாது?

65. நம்மை நோய் அணுகாமல் காப்பவை யாவை?

66. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?